மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.67/2021</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 08ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கெர்சேம்ஜேக்கப் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | மதுக்கரை |
| மதம் | கிருஸ்டியன் | மாவட்டம் | கோயமுத்தூர் |

<u>08.09.2025 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் CSI யூனியன் சர்ச் போத்தனூர் கோயமுத்தூரில் பாதராக கடந்த 10 ஆண்டுகளாக உள்ளேன். எங்கள் சர்சின் 1967 முதல் 1995 ஆண்டிக்கான திருமணப் பதிவேட்டை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். கடந்த 15.02.1984ம் தேதி சாமிதுரை மற்றும் ஜெயின் எமிலி ஆகியோர்களின் திருமணம் மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் என்னால் சான்றிடப்பட்டு வழங்கப்பட்டது தான். அதன் அசல் பதிவேட்டை நான் நீதிமன்றத்திற்கு இன்று எடுத்து வந்துள்ளேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.08 19:24:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.